பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**01 02 2026** **7 15**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வரும் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட் நாடாளுமன்றத்தில் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

2. பிரதமர் திரு. நரேந்திர மோடி லூதியானாவில் உள்ள **Halwara** விமான நிலையத்தின் புதிய முனைய கட்டிடத்தை இன்று திறந்து வைக்கிறார்.

3. கோவா மாநில பிஜேபி அரசு கடந்த **5** ஆண்டுகளில் ஏராளமான வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்தியுள்ளதாக பிஜேபி தேசிய தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

4. மேற்கு ஆசியாவில் சர்வதேச சட்டங்கள் மற்றும் ஐ.நா. சபை தீர்மானங்களின்படி நீடித்த அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்று இந்திய அரபு வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டம் வலியுறுத்தியுள்ளது.

5. **19** வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மக்களவையில் இன்று தாக்கல் செய்கிறார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசில் தொடர்ந்து 9வது முறையாக மத்திய பட்ஜெட்டை திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார்.

மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட பிறகு பட்ஜெட் நகல் மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்படும்.

பட்ஜெட் தயாரிப்புக்கு முன்னதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், பொருளாதார நிபுணர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், கல்வி மற்றும் சுகாதாரத்துறையை சேர்ந்தவர்கள், சிறு குறு நடுத்தர தொழில்துறியனர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் விரிவான ஆலோசனை நடத்தினார்.

அதேபோல் வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹானுடன் வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி குறித்து பல்வேறு ஆலோசனை மேற்கொண்டு அதனடிப்படையில் மத்திய பட்ஜெட்டை தயாரித்துள்ளார்.

இந்த பட்ஜெட்டில் அரசின் வருவாய் செலவின திட்டங்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் நீடித்த நிதி மேலாண்மை குறித்த முக்கிய அறிவிப்புகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக இளைஞர்கள் உள்ளிட்ட பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட ஆலோசனைகளும் இந்த பட்ஜெட்டில் பிரதிபலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் நிறைவடைந்தவுடன் பட்ஜெட் ஆவணங்கள், யூனியன் பட்ஜெட் என்ற மொபைல் செயலி மற்றும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட உள்ளது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பஞ்சாப் மாநிலம் ஜலந்தர் செல்கிறார்.

ஜலந்தர் மாவட்டத்தில் **Dera Sachkhand Ballan** பகுதிக்குச் செல்லும் பிரதமர், அங்கு குரு ரவிதாசுக்கு மரியாதை செலுத்துவதுடன் அவரது **649**வது பிறந்தநாள் விழாவில் பங்கேற்றுப் பேசுகிறார்.

பின்னர் ஆதம்பூர் விமான நிலையத்திற்கு சமூக சீர்திருத்தவாதி சாந்தகுரு ரவிதாஸ் விமான நிலையம் என்று பெயர் சூட்டும் நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார்.

சமத்துவம், கருணை மற்றும் மனித மாண்பு ஆகிய போதனைகளால் மக்களுக்கு உத்வேகம் அளித்து வரும் குரு ரவிதாஸ் அவர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து லூதியானாவில் உள்ள **Halwara** விமான நிலையத்தின் புதிய முனைய கட்டிடத்தை காணொலி வாயிலாக பிரதமர் திறந்து வைக்கிறார்.

லூதியானா மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொழில் மற்றும் வேளாண் பணிகளுக்கு இது ஒரு புதிய நுழைவு வாயிலாக அமையும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**Halwara**-வில் ஏற்கனவே இருந்த விமான நிலையத்தின் ஓடுதளம் சிறியதாக இருந்த நிலையில் தற்போது போயிங் ரக பெரிய விமானங்களும் வந்து செல்லும் வகையில் மிக நீளமான ஓடுதளம் அமைக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கோவா மாநில பிஜேபி அரசு கடந்த 5 ஆண்டுகளில் ஏராளமான வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்தியுள்ளதாக பிஜேபி தேசிய தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

கோவாவில் அடுத்த ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அம்மாநில தலைநகர் பனாஜியில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், தேர்தல் பணிகளை பிஜேபி முழுவீச்சில் தொடங்கியுள்ளதாக கூறினார்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் குறைந்தபட்சம் 50 சதவீத வாக்குகளைப் பெறுவதை இலக்காகக் கொண்டு தொண்டர்கள் பணியாற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மத்தியிலும், மாநிலத்திலும் இரட்டை எஞ்சின் அரசு இருப்பதால் மாநிலம் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்வதாக அவர் தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 12 ஆயிரம் ரூபாயாக இருந்த கோவா மாநிலத்தின் தனிநபர் வருமானம், கடந்த நிதியாண்டில் மூன்று லட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது என்று அவர் கூறினார்.

இது பொருளாதார வளர்ச்சி, மாநிலத்தின் உள்கட்டமைப்பு வசதிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை பிரதிபலிப்பதாக திரு. நிதின் நபின் தெரிவித்தார்.

<<<<>>>>

திரிபுரா மாநிலம் கல்வி, கலாச்சாரம், விளையாட்டு, தொழில் மற்றும் வர்த்தகம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் வேகமாக முன்னேறி வருவதாகவும், வளர்ச்சியில் நாட்டின் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளதாகவும் மாநில முதலமைச்சர் திரு மாணிக் சாஹா தெரிவித்துள்ளார்.

தெற்கு திரிபுரா மாவட்டத்தின் பெலோனியாவில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பல கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை அவர் காணொளி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.

பின்னர் உரையாற்றிய அவர், மாநிலத்தின் ஒவ்வொரு வளர்ச்சித் திட்டத்தின் பயன்களும் விளிம்புநிலை மக்களைச் சென்றடைவதை உறுதி செய்யத் தங்கள் அரசு தொடர்ந்து பணியாற்றி வருவதாகக் குறிப்பிட்டார்.

<<<<>>>>

மேற்கு ஆசியாவில் சர்வதேச சட்டங்கள் மற்றும் ஐ.நா. சபை தீர்மானங்களின்படி நீடித்த அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்று இந்திய அரபு வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டம் வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்குப் பின்னர் வெளியிடப்பட்ட தில்லி பிரகடனத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1967ஆம் ஆண்டு எல்லைகளின் அடிப்படையில் இஸ்ரேலுடன் இணைந்து அமைதியாக வாழக்கூடிய இறையாண்மை கொண்ட சுதந்திரமான பாலஸ்தீன நாடு அமைய வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெபனான் நாட்டின் எல்லையை மதிக்க வேண்டும் என்றும், அந்நாட்டின் முழு அதிகாரமும் தேசிய படையின் கட்டுப்பாட்டில் மட்டுமே இருக்க வேண்டும் என்றும் தில்லி பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பி.ஆர்.எஸ். தலைவரும், தெலுங்கானா மாநில முன்னாள் முதலமைச்சருமான திரு. கே. சந்திரசேகர் ராவ், தொலைபேசி

ஒட்டுக்கேட்பு வழக்கில் மாநில காவல்துறை தனக்கு வழங்கப்பட்ட நோட்டீஸ்கள், சட்ட நடைமுறைகளை மீறுவதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், காவல்துறையினர் உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்களையும், அரசியலமைப்புச் சட்ட விதிகளையும் புறக்கணித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சிறப்பு விசாரணைக்குழு மற்றும் காவல்துறை நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சித்த போதிலும், முன்னாள் முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் தனது பொறுப்பினை உணர்ந்து விசாரணைக்கு ஒத்துழைக்கப் போவதாக திரு கே. சந்திரசேகர் ராவ் கூறியுள்ளார்.

இதன்படி, ஹைதராபாத்தில் உள்ள நந்தினகர் இல்லத்தில் இன்று மதியம் அதிகாரிகள் விசாரணை நடத்துவதற்கு அவர் அனுமதி வழங்கியுள்ளார்.

<<<<>>>>

இந்திய கடலோர காவல்படை இன்று தனது 50-வது நிறுவன நாளை கொண்டாடுகிறது.

நாட்டிற்காக கடந்த **50** ஆண்டுகளுக்கும் மேலாக அர்ப்பணிப்புடன் கூடிய தன்னலமற்ற சேவையை ஆற்றி வருவதைக் குறிக்கும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

**1977-**ஆம் ஆண்டு பிப்ரவரி ஒன்றாம் தேதி, வெறும் ஏழு சிறிய கப்பல்களுடன் தொடங்கப்பட்ட இந்திய கடலோர காவல்படை, இன்று **155** கப்பல்கள் மற்றும் **80** விமானங்களைக் கொண்ட ஒரு பிரம்மாண்டமான கடல்சார் சக்தியாகப் பரிணமித்துள்ளது.

வரும் **2030-**ஆம் ஆண்டிற்குள் **200** கப்பல்கள் மற்றும் **100** விமானங்கள் என்ற இலக்கை எட்ட இப்படை தயாராகி வருகிறது.

<<<<>>>>

அமெரிக்காவில் ஜனநாயக கட்சியால் நிர்வகிக்கப்படும் மாகாணங்களில் குடியேற்ற கொள்கைகளை எதிர்த்து நடைபெறும் போராட்டங்களை மாகண அரசுகள் கட்டுப்படுத்தவேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு.டோனல்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

கலவரங்களில், உள்ளூர் அதிகாரிகள் முறையாகக் கேட்டுக்கொண்டால் ஒழிய, மத்திய பாதுகாப்புப் படையினர் தலையிட மாட்டார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது குறித்து தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள திரு டிரம்ப், அமெரிக்க அரசுக்க அரசுக்குச் சொந்தமான கட்டிடங்கள் மற்றும் சொத்துக்கள் தாக்கப்பட்டால், அதனைத் தற்காத்துக் கொள்ள எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மினியாபோலிஸ் பகுதியில் குடியேற்ற அமலாக்க நடவடிக்கைகளின் போது ஏற்பட்ட துப்பாக்கிச் சூடு சம்பவங்களைத் தொடர்ந்து, நாடு தழுவிய அளவில் விவாதங்கள் எழுந்துள்ள சூழலில் இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார்.

<<<<>>>>

**19** வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

**Bulawayo**-வில் நடைபெற உள்ள இப்போட்டி இந்திய நேரப்படி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு தொடங்குகிறது.

-------------

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் **Devika Singh** இன்று மலேசியாவின் **Goh Jin Wei**-ஐ எதிர்கொள்கிறார்.

---------------

ப்ரீமியர் லீக் மகளிர் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி இன்று உத்தரப்பிரதேச அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் நடைபெற உள்ள இந்தப் போட்டி இன்றிரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

---------------

நியூசிலாந்துக்கு எதிரான 5வது மற்றும் இறுதி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 46 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

திருவனந்தபுரத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 5 விக்கெட் இழப்பிற்கு 271 ரன் எடுத்தது.

இஷான் கிஷன் 43 பந்துகளில் 103 ரன்னும், சூர்யாகுமார் யாதவ் 30 பந்துகளில் 63 ரன்னும் எடுத்தனர்.

272 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய நியூசிலாந்து அணி, 19 புள்ளி 4 ஓவரில் 225 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அர்ஷ்தீப் சிங் அபாரமாக பந்துவீசி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அக்ஷர் படேல் 3 விக்கெட்டுகளையும், வருண் சக்கரவர்த்தி, ரிங்கு சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

**<<<<The End>>>>**